**பிரித்தானியா அரசாங்க நிதி உதவியைப் பயன்படுத்தும் பிராந்திய பாலங்கள் செயற்திட்டம் (யூகே உருக்கு பாலங்கள் செயற்திட்டம்) - 2012**

---

**1. அபிப்பிராயம்**

எனது பரிசோதனைகளிலிருந்து தெரிவதும் எனது சிறந்த தகவல்களுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களிற்கிணங்கவும் இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழக்கூடிய சீராக்கங்களைத் தவிரவும்

(அ) செயற்திட்டம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள். அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்

(ஈ) கடன் உடன்படிக்கையில் சொல்லப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 நிதிசார் செயலாற்றல்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் தரப்பட்ட தகவல்களின் படி 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 300 மில்லியனானதுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 23,695 மில்லியனாகும். மீளாய்வாண்டிற்கான செலவினம் மற்றும் முன்னைய

ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பு பின்வரும் கூற்றில் காட்டப்படுகின்றது.

| விபரம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
| --- | --- | --- | --- |
| | 2012 | 2011 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| நிலையான சொத்துக்கள் | 329,966 | 454,102 | 24,492,670 |
| மேம்பாலங்கள் | 48,025,488 | 118,330,575 | 7,463,408,952 |
| பாலங்கள் | 199,990,445 | 2,029,320,979 | 15,136,130,625 |
| செயற்திட்ட முகாமைத்துவக் கிரயம் | 23,148,154 | 212,490,050 | 1,071,253,310 |
| தேறிய நடைமுறைச் சொத்துக்கள் | 28,527,098 | 82,574,036 | 341,891,732 |
| | 300,021,151 | 2,443,169,742 | 23,695,285,557 |

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதிகளின் பயன்பாடு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, செயற்திட்டத்தின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிகளின் பயன்பாடு மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைமை என்பன தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | 2012 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | 2012 ஆம் ஆண்டிற்கான நிதிகளின் பயன்பாடு | 2012 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள் |
|---|---|---|---|---|---|
| | யூ.கே.பவுன்ஸ் (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) |
| எச்எஸ்பீசீ | 50 | 11,284 | 62 | 61 | 16,173 |
| இலங்கை அரசாங்கம் | - | 10,500 | 250 | 238 | 7,863 |
| மொத்தம் | 50 | 21,784 | 312 | 299* | 24,036* |

* ஆண்டு இறுதியில் பெறவேண்டியவை மற்றும் செலுத்த வேண்டியவை உள்ளடக்கப்பட்டிராமையால் அறிக்கையின் பந்தி 4 இல் காட்டப்பட்ட தொகையுடன் இந்த தொகை உடன்பட்டிருக்கவில்லை.

**3.2 பௌதீக செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆரம்ப ஒப்பந்தம் வழங்குநர்களின் இணக்கப்பாட்டுடன் 2007 முதல் 2010 வரையான காலத்தின் போது எட்டு சந்தர்ப்பங்களில் தொடர்ந்து திருத்தப்பட்டிருந்ததுடன் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. ஆகவே, 5,563 பிரயாண மீற்றர்கள் நீளத்துடன் 222 சீராக்க வேண்டிய பாலங்கள் 4,316 பிரயாண மீற்றர்கள் நீளத்துடன் 126 பாலங்களிற்கு குறைக்கப்பட்டிருந்தது. மேலும், 1,484 பிரயாண மீற்றர்கள் நீளத்துடன் ஐந்து புதிய மேம் பாலங்களும் சேர்க்கப்பட்டிருந்ததுடன் 356 பிரயாண மீற்றர்கள் நீளத்துடன் 10 சீரக்கமுடியாத பாலங்களும் சேர்க்கப்பட்டிருந்தது. ஆரம்ப ஒப்பந்தத்தின் வேலை நோக்கெல்லை அடிக்கடி செய்யும் மாற்றங்களின் விளைவால் இட அமைவு, நீளம், அகலம் மற்றும் பால நிர்மாணங்களின் முன்னுரிமைகள் என்பவற்றை செயற்திட்ட முகாமைத்துவக் கூறு (பீஎம்யூ) இனங்காணத் தவறியிருந்தது. அவற்றின் ஆரம்ப திட்டங்களும் மாற்றத்திற்குள்ளாக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் பௌதீக செயலாற்றல் கீழே கொடுக்கப்பட்ட அட்டவனையில் விபரிக்கப்படுகிறது.

| பாலங்களின் வகை | பிரேரிக்கப்பட்ட பாலங்களின் எண்ணிக்கை | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | |
|---|---|---|---|---|
| | | பூர்த்தியாக்கப்பட்ட பாலங்கள் | | நடைபெறும் வேலைகள் |
| | | தற்காலிக அடிப்படை | நிரந்தர அடிப்படை | |
| | எண்ணிக்கை | எண்ணிக்கை | எண்ணிக்கை | எண்ணிக்கை |
| சீராக்கத்தக்க பாலங்கள் (சீ200) | 113 | 12 | 99 | 02 |
| உறுதியான விரைவுப் பாலங்கள் | 59 | இல்லை | 41 | 18 |
| தட்டைவடிவ பாலங்கள் | 04 | இல்லை | 03 | 01 |
| முக்கோணவடிவ பாலங்கள் | 06 | இல்லை | 04 | 02 |
| மேம்பாலங்கள் | 05 | இல்லை | 05 | இல்லை |

## 4. ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டமானது 2008 இல் களனியில் புகையிரத வழியை மேவி இரண்டு மேம்பாலங்கள் நிர்மாணிப்பதற்காக ரூபா 3,202,535,538 தொகை ஏற்பட்டிருந்தது. 2013 நவம்பர் 18 இல் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையில் மேம்பாலங்களின் 80 டெக் பிளேற்கள் சேதமடைந்திருந்ததுடன் மேம்பாலங்களின் பிரதான வீம்களிற்கு பொருத்தியிருந்த உதிரிப்பாகங்களில் வெடிப்புகள் காணப்பட்டது என வெளிப்பட்டது.

(ஆ) மேலும், செயற்திட்டமானது 2011 இல் செருவாவில்ல- பழையதோப்பூர் வீதியில் உருக்கு பாலமொன்றை நிர்மாணித்திருந்ததுடன் அவற்றில் ரூபா 11,112,815 பெறுமதியான பாலக் கூறுகள் பயன்படுத்தப்பட்டது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(i) திருகோணமலை – மட்டக்களப்பு வீதிக்கு இலகுவாக வாகனங்கள் நுழைவதற்கு ஏற்றவாறு உருக்குப் பாலங்கள் முறைப்படி வடிவமைப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. இதன்விளைவாக, திருகோணமலை – மட்டக்களப்பு வீதிக்கு அருகிலுள்ள பாலச்சுவர்களின் இரு பக்கமும் பிரதான வீதி மற்றும் நுழைவு வீதிகளிற்கு வாகனங்கள் திருப்புதல் காரணமாக சேதடைந்திருந்தன.

(ii) வடிவமைக்கப்பட்டவாறு பாலங்களின் பீம் பொருத்துதல் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, பாலங்களின் இருபகுதிகளின் பீம் பொருத்துதல் ஒரே மாதிரி இருக்காததுடன் முறையே 0.2 மீற்றர் மற்றும் 0.35 மீற்றர் முரண் அவதானிக்கப்பட்டது.

(இ) ஒருகொடவத்தையில் பால மேற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றங்களில் ஒப்பந்தகாரருக்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 6,769,229 தொகை செயற்பட்ட வேலைகளிற்கு அனுமதி கிடைக்காமையால் 2008 இலிருந்து நிதிக்கூற்றுக்களில் நிலுவையாக இருந்தது. எவ்வாறாயினும், மிகுதி வேண்டப்பட்ட அங்கீகாரம் இல்லாமல் 2012 இல் தீர்க்கப்பட்டிருந்தது.

(ஈ) 14 பாலங்களின் நிர்மாணம் 56 முதல் 815 நாட்கள் வரையான வீச்சில் தாமதத்துடன் 2012 திசெம்பர் 31 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. வேலைகள் பூர்த்தியாக்குவதற்கான கால நீடிப்பு தாமதத்திற்கான காரணங்களின் தகுதி மற்றும் தாமதக் கட்டணங்கள் விதிப்பதற்கான சாத்தியத்தன்மை என்பவற்றைக் கருத்திற்கொள்ளாமல் வழங்கப்பட்டிருந்தது.

(உ) மேலும், ரூபா 35,938,107 தொகையாக தொழிலாரம்பிப்பு முற்பணங்கள் 2011 இல் நான்கு ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் அதில், ரூபா 14,698,964 தொகை நிர்மாண வேலைகள் பூர்த்தியக்கலிலுள்ள தாமதம் காரணமாக 2012 திசெம்பர் 31 வரையும் நிலுவையாக இருந்தது.

(ஊ) நிர்மாணங்கள் பூர்த்தியக்கலிலுள்ள தாமதங்களில் மீளாய்வாண்டின் போது 14 ஒப்பந்தகாரர்களிலிருந்து அறவிடப்பட்ட ரூபா 56,244,288 தொகையான தண்டப்பணங்களில், ரூபா 28,284,272 தொகை உரிய தரப்பினரின் அனுமதியில்லாமல் சொல்லப்பட்ட ஒப்பந்தகாரருக்கு திரும்ப செலுத்தப்பட்டிருந்தது. மேலும், மீள்கொடுப்பனவிற்கான காரணங்கள் கணக்காய்விற்கு விளக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) திருகோணமலை மாவட்டத்தில் ரூபா 3,252,277,585 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட 101 பாலங்களில் இரண்டு பாலங்கள் 2012 திசெம்பர் 31 இல் 2 ஆண்டுகளிற்கு முன்னரே நிர்மாண வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அத்தகையவாறு பாலங்களின் ஒழுங்கான பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டின் போது ஒருங்கிணைப்பு உத்தியோகத்தராக சேர்க்கப்பட்டவரின் செய்யப்பட்ட வேலை மற்றும் செலுத்தப்பட்ட ரூபா 630,000 தொகை சம்பளங்கள் மற்றும் எரிபொருள் செலவினங்கள் என்பவற்றின் விபரங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.